அறிவினு னுகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்ருக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் VIII.] NOVEMBER, 1908-ஞு நவம்பர்மீ. [இலக்கம் 4.

ஓர் இடையனுடைய நாய்.

அநேக வருடங்கட்குமுன் ஸ்காத்லாந்து தேசத்தின் மலைகளைச்சார்ந்த ஒரு கணவாயில் ஓர் இடையன் தன் மனைவியுடனும் பத்து வயதுள்ள ஒரு குமாரனுடனும் வாசஞ் செய்துகொண்டிருந்தான். அவன் வசித்திருந்த கணவாயானது மனிதர்கள் குடியிருக்கும் கிராமங்களுக்கு வெகு தூரத்திலிருந்தது. அவ்விடையன் "ஷாக்" என்னும் பெயருள்ள ஒரு நாயை வளர்த்து வந்தான். ஒருநாள் இராத்திரி அந்த இடையனுடைய மனைவிக்குத் தேகம் அசௌக்கியமாயிருந்தது. அவ்விரவு டிசம்பர் மாத இரவாகையால் காற்றின்றிப் பனிக்கட்டிமாத்திரம் சிறிது சிறிதாக விழுந்துகொண்டிருந்தது. இடையன் தன் மனைவியின் அசௌக்கியத்தை முன்னிட்டு வைத்தியனிடம் போய் மருந்து வாங்கி வருவதற்காகத் தன்னுடைய நீண்ட தடியை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். இதை யறிந்த அவன் குமாரன், "நாயனு! பொறு, பொறு!! ஆடுகள் போகும் வழி உனக்குத் தெரிந்தவனாயில் எனக்குந் தெரியுமாகையால், நம்முடைய நாய் ஷாக்கை எனக்குத் துணையாக அழைத்துக்கொண்டு வைத்தியனிடம் போய் மருந்து வாங்கிக் கொண்டு வருகிறேன். நீ யாதொன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை; ஷாக் கென்னும் நாய் என்னோடு வருவதால் எனக்கு ஒரு அபாயமு மணுகாது. நீ என் தாயாருக்கு உதவியாக இங்குதானே இரு" என்று சொல்லிவிட்டு, நாயை அழைத்துக்கொண்டு, நாய் முன்னும், சிறுவன் பின்னுமாகக் கூடிய விரைவில் வைத்தியன் வீட்டுக்குப் போய்த் தன் தாயாரின் அசௌக்கியத்தை அவனிடம் சொல்லி, அவன் கொடுத்த மருந்துகளை வாங்கிக்கொண்டுஉடனே தன் வீட்டுக்குப்போகத் திரும்பினுன். அப்போது அதிகமான பனி பெய்துகொண்டிருந்ததால், எவ்விதத்திலும் சீக்கிரம் வீடுபோய்ச் சேரவேண்டுமென்ற நோக்கத்துடன் தைரியத்தை விடாது அவன் ஷாக்கோடு புறப்பட்டுப் போகும்போது, ஷாக் என்னும் நாயானது தான் போகும் வழியின் இருபக்கங்களிலும் யாதொரு அபாயமுமில்லாமல் இருக்கிறதாவென்று தான் அவனுக்கு முன்னுல் மோப்பம் பிடித்துக் கொண்டு சரியான பாதையைக் காட்டிக் கொண்டே சென்றது. இப்படியாகச் சிறிது தூரம் சென்றபின், வழியில் ஏதோ அபாயம் நேரிடும்படியான சந்தர்ப்பத்தைத் தன் மோப்பத்தால் கண்டு, அந்த நாய் அங்கு தானே நின்றுவிட்டது. அதை அறியாத

சிறுவன் பலமுறை அந்நாயைப் போகும் படித் தூத்தியும் அது சற்றும் அடிபெயர்த்து வைக்காமல் நின்றுவிட்டது. கடைசியில் அச்சிறுவன் அந்நாயினுடைய எச்சரிக்கையைக் கண்டுகொள்ளாமல் அஜாக்கிரதையாய்த் தானே முன்னதாகச் சென்றான். அவ்வாறு அவன் இரண்டொரு அடிபெயர்த்துச் சென்றதும் இருளில் பனியினால் மூடப்பட்டிருந்த ஒரு கற்பாறையின்பேரில் தடுக்கப்பட்டு ஒரு பள்ளத்தில் விழுந்துவிட்டான். சிறுவன் பள்ளத்தில் விழுந்தவுடன் ஷாக் என்னும் நாய் கீழிறங்கி அவனைப் பார்த்தது. அப்பொழுது தைரியசாலியான அச்சிறுவன் தனக்குண்டான கொஞ்சம் பலத்தினால் வைத்தியன் கொடுத்த மருந்துப்பொட்டலங்களைத் தன் கைக்குட்டையில் முடிந்து அந்நாயின் கழுத்தில் கட்டி அதை வீட்டுக்குத் தூத்திவிட்டான். சிறுவன் மருந்து வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வருவானென்று அவனுடைய பெற்றோர்கள் எதிர்ப்பார்த்தும் அவன் வாராததற்குக் காரணம் தெரியாதவர்களாய் மிகவும் சிந்தித்துக்கொண்டிருக்கையில் அர்த்தராத்திரியில் தங்களுடைய ஷாக் என்னும் நாய் குரைக்கும் சப்தம்மாத்திரம் கேட்டது. அச்சப்தத்தைக் கேட்டவுடனே அதிகச் சந்தோஷங்கொண்டு, தங்களுடைய சிறுவனைப் பார்க்கவேண்டுமென்று கதவைத் திறந்து, அச்சிறுவனுடைய தகப்பனாகிய இடையன் வெளியே வர, சிறுவனைக் காணாமல் நாய்மாத்திரம் உள்ளே வரக் கண்டான். இச்செய்தி யறிந்த இடையன் தன் சிறுவன் பனியினால் மரணமாய்விட்டானோ என்று சந்தேகமுடையவனாய் விசனப்பட்டுக்கொண்டிருக்கும்போது, இடையன் நாயின் கழுத்தில் கட்டியிருந்த ஒரு மூட்டையை அவிழ்த்துப் பார்த்து, ''நம் குமாரன் சாகவில்லை. இதோ அவன் கைக்குட்டையில் மருந்து கட்டி அனுப்பியிருக்கிறான். ஒருவேளை அவன் எந்தக் கணவாயிலாகிலும் விழுந்துவிட்டானோ? நான் போய்ப் பார்த்து வருகிறேன், கடவுளை நம்பி இரு'' என்று தன் மனைவிக்குத் தைரியம் சொல்லிக் குமாரனிருக்கு மிடத்தைத் தேடுவதற்குப் புறப்பட்டான். அவன் குடிசையை விட்டுக் குமாரனைத் தேடுவதற்குப் போகையில் ஷாக் என்னும் நாயும் அவனோடுகூடப் புறப்பட்டது. அச்சிறுவனுடைய தாயார் தனியாகவிருந்து தன் புருஷன் வரவையும், சிறுவனுடைய க்ஷேமத்தையுங் கோரிக்கொண்டு, அவர்களுடைய உயிர்கள் இந்நாயினுடைய சாமர்த்தியத்தினாலும் புத்திச் சாதுரியத்தினாலும் காக்கப்படவேண்டுமென்று நினைத்துக்கொண்டு தன் குடிசையில் கடவுளைச் சிந்தித்துக்கொண்டிருந்தாள். ஆனால், அவள் அந்நாய்க்குக் கடவுள் தகுதியான புத்தியையும் பலத்தையும் கொடுத்துக் காப்பாற்றுவாரென்று தைரியத்துடன் நம்பி இருந்தாள். நாய் கொஞ்சதூரம் இடையனோடு போய் ஒரு குறுக்கு வழி திரும்பிச் சிறுவன் விழுந்துகிடக்கும் பாறையிடம் வந்து இறங்கிற்று. அச்சிறுவனுடைய தகப்பனும் இவ்விடத்தில்தான் தன் மகன் விழுந்திருக்க வேண்டுமென்றெண்ணி மிகவும் அபாயகரமான அப்பள்ளத்தில் அவ்விடத்திலிருக்கும் முட்செடிகளைப் பிடித்துக்கொண்டு இறங்குகையில், அந்நாய் இதற்குள்ளாக அவ்விடத்தில் விழுந்திருந்த பனிக்கட்டிகளைக் கால்களின் நகங்களாற் பீறி, அப்புறம் தள்ளிக்கொண்டு ஏதோ வாசனையைப் பார்த்துக்கொண் டிருந்தது. இது ஒருவேளை தன் குமாரனின் சரீரமாக விருக்குமென்று தகப்பன் எண்ணி அருகே வந்து பார்த்தான். அப்படிப் பார்க்கையில் அச்சிறுவன் சாகவில்லை யென்றும், மூர்ச்சையடைந்திருக்கிறானென்றும் தெரிந்தது. தகப்பன் அவனைத் தன் கைகளால் எடுத்துப் புஜங்களின்பேரில் போட்டுச் சுமந்துகொண்டு அதிசிரமத்துடன் மெல்லென மேடேறித் தன் வீடுபோய்ச் சேர்ந்தான். வீட்டுக்கு வந்தவுடன் தக்க உபசாரங்கள் செய்யவே, சிறுவன் தேகஸ்திதி சுகமாய்விட்டது. ஷாக் என்னும் நாய் கிழமாய்ப் போகும்வரை அக்கணவாய்களிலேயே மிகவும் கனிகரத்துடன் போஷிக்கப்பட்டிருந்தது. அப்பயங்கரமான இருளில் அச்சிறுவனுடைய பிராணத்தை அந்நாய் காப்பாற்றினதற்காக அவ்விடத்திலிருந்தவர்க ளெல்லோரும் அதனிடத்தில் அதிகவிசுவாசமுள்ளவர்களாய், அது செய்த ஒரு நன்றியை மறவாமல் அது ஜீவித்திருந்த நாள்வரையில் அதற்கு யாதொரு தீங்கும் நேரிடாமல் அதனைக் காப்பாற்றிவந்தார்கள். இதனால் நாய் மிக்க விசுவாசமுள்ளதும், மனிதர்கட்குப் பேருபகாரம் செய்ய வல்லதுமான ஜந்துவென்று நாம் அறியவேண்டும்.

திருவாங்கூரில் கால்நடைகளின் தொற்றுவியாதி.

ஐந்து வர்த்தமான ஸார பத்திராதிபருக்கு.

ஐயா,

மத்திய திருவாங்கூரில் கால்நடைகளுக்கு ஓர்வித தொற்றுவியாதி பரவியிருக்கிறது. மத்திய திருவாங்கூரிலிருக்கும் ஓமலூர் என்னும் கிராமத்தில் நடந்தேறிய கால்நடைகளின் சந்தைக்குப் பாண்டி என்னுமிடத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கால்நடைகளின் மந்தைகளில் முதல் முதல் இவ்வியாதி உண்டாயிற்று. இது தொற்றுவியாதி யென்றே எண்ணப்படுகிறது. இவ்வியாதி ஊருக்குள் வளர்க்கப்பட்ட அநேகங் கால்நடைகளுக்குக் கண்டு, மிகவுங் கெடுதியை உண்டாக்கிவருகிறது. இவ்வியாதி வாந்திபேதியும் ஜ்வரமும் கலந்ததைப்போலிருக்கிறது. இந்த வியாதியுள்ள கால்நடைகளுக்கு அவைகள் போடும் சாணத்தில் இரத்தம் விழுதல், கழிச்சல், மூக்கிலிருந்து ஜலம் வடிதல், கண்களிலிருந்து நீர் வடிதல், அதிக தாகம், ஜ்வரம் முதலிய இவ்விதச் சின்னங்களுண்டாகின்றன. ஆனால் இவ்வியாதிக்குச் சில சுதேச வைத்தியர்கள் கொடுத்துவரும் மருந்தினால் ஒன்றும் குணமாகவில்லை யென்று சிலர் கூறுகிறார்கள். அது முற்றிலும் தவறு. அதற்கு மிகவும் சுலபமான சிகிச்சை யுண்டு. சுதேச வைத்தியர்கள் தாம் கண்டுபிடிப்பதை ஆங்கிலேயரைப் போல் வெளிப்படுத்தாத குற்றமொன்றேயொழிய, அவர்களுக்குத் தெரியாத தொன்றில்லை. இதற்குச் சிகிச்சை யின்னதெனப் பின்னால் தெரிவிக்கின்றோம். இந்தத் தொற்றுவியாதி மேற்படி திருவாங்கூரில் பரவின பிறகு அநேகர் வெகு பக்ஷமுடன் வளர்த்துவந்த நேர்த்தியான கால்நடைகளெல்லாம் மாண்டுபோய்விட்டன. ஆகையால் கவர்ன்மெண்டார் உடனே தக்க முயற்சிகளெடுத்துக்கொண்டு ஒரு தேர்ந்த வெட்ரினரி வைத்தியரை அனுப்பி அவ்வியாதியை அடியோடு நீக்கச்செய்தால் மிகவும் பேருபகாரமாகவிருக்குமென்றும் கருதுகிறார்கள். ஊரூராக எத்தனை எத்தனை கால்நடைகள் மாண்டன. சென்னை முனிசிபாலிடியில் யானைபோலுருக்கொண் டுழைத்த ரிஷபங்களையொத்த மாடுகள் எத்தனை எத்தனை மாண்டன. ஆதலால் சுதேச வைத்தியத்தில் இதற்குத் தகுதியானதும் சுலபமானதுமான ஒரு சிகிச்சையைத் தெரிவிக்கின்றோம்.

கால்நடைகட்கு நோய் காணுமுன் இரையெடுக்காமலும், அசை போடாமலுமிருந்து நோய் கண்டபின் பேதியானாலாவது வாயில் ரத்தம் கக்கினாலாவது:— பெருங்காயம் $\frac{1}{2}$ பலம் நன்றா யிடித்து, எருக்கம் பழுப்பு இலை மூன்றில் அதனை வைத்துச் சுருட்டி மாட்டுக்குக் கொடுத்துவிட்டு, $\frac{1}{2}$ பலம் மிளகு, தும்பையிலை, நொச்சி இலையுடன் சேர்த்து அரைத்துக் குழப்பிக்கொண்டு கண், காது மூக்குகளில் விடவேண்டியது. விட்டவுடன் மூக்கின்பேரில் வியர்த்ததானால் வியாதி குணப்பட்டதாக நிச்சயிக்கலாம். இது கைகண்ட ஒரேவேளை மருந்து. மருந்து கொடுக்கப்பட்ட இரண்டொருநாள் ஆகாரம் எடுக்காவிட்டால் புளிச்சதண்ணீரைக் காயவைத்துக் குடிப்பிக்கவேண்டியது. குளிர்ந்த ஜலங் குடிப்பிக்கவாவது, குளிர்ந்த ஜலத்தில் நிற்கவைப்பதாவது கண்டிப்பாய்க் கூடாது. இதைப் பலரும் செய்து பார்த்து அறிந்து கொள்ளலாம்.

நித்திலமணி.

சகாதேவரின் பசுச் சாஸ்திரம்.

மகா பாரத வீரராகிய பாண்டுப்புத்திரர்களவரில் கடைசிப் புத்திரராகிய சகாதேவரால் அருளப்பட்ட பசுச் சாஸ்திரமென்னுங் கிரந்தத்தைக் குடியானவர்கள் முதலான சாமான்ய ஜனங்க ளெல்லோருக்கும் மிகவும் உபயோகப்படுமாறு ம-ள-ள-ஸ்ரீ. நந்திராஜு செலபதிராவ் என்பவர் சுலபமான தெலுங்கு நடையில் எழுதி, ஏலூரு மஞ்சுவாணி முத்திராக்ஷரசாலையில் பதிப்பித்திருக்கின்றனர். அதன் முகவுரையில் அவர் சொல்லியிருக்கும் சில சங்கதிகளை நாமெல்லோரும் முக்கியமாகக் கவனிக்கவேண்டி யிருப்பதால் அவற்றை இங்கு எழுதலானோம்.

நம் தேசத்தில் கால்நடைகள் க்ஷீணித்துப் பசுக்கள் ஆடுகளைப்போலவும், ஆடுகள் முயல்களைப்போலவும் உருவத்தில் குறைந்து வந்து குடியானவர்களால் சரியாய்ப் போஷிக்கப்படாமல் சீக்கிரத்தில் நசித்துப் போய்

விடுகின்றன. இதைச் சீர்திருத்த வேண்டுமென்றே ஜீவஹிம்ச நிவாரணச் சங்கங்கள் எங்கும் பிரபலப்பட்டுக் கவர்ன்மெண்டாரும் அச்சங்கங்களுக்கு உதவிசெய்து வருகிறார்கள். கவர்ன்மெண்டார் கால்நடைகளின் சம்ரக்ஷணைக்காகச் சென்னை, பல்லாரி, பெத்தாபுரம், மதுரை, திருச்சினாப்பள்ளி, சைதாப்பேட்டை முதலான விடங்களில் கால்நடைகளுக்குச் சிகிச்சை செய்யும் வைத்திய சாலைகளை யேற்படுத்தி யிருக்கிறார்கள். சென்னையில் வருஷத்தில் 75 மாணாக்கர்கள் இவ்விதச் சிகிச்சைகள் கற்பிக்கப்படுகிறார்கள். கிருஷ்ணா, கோதாவரி, கர்னூல், கஞ்சம், நெல்லூர், அனந்தபுரம், ஆற்காடு, மதுரை முதலிய ஜில்லாக்களில் அளவற்ற கால்நடைகள் மரணமடைவதால், அந்தந்த ஜில்லாக்களிலும் கால்நடைகளுக்காகச்சிகிச்சாசாலைகளை யேற்படுத்த உத்தேசித்திருக்கிறார்கள்.

ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் முதலான உத்தியோகஸ்தர்கள் தாங்கள் வேலை பார்த்து வரும் இடங்களில் கால்நடைகளுக்கு வியாதிக ளணுகினவுடனே மேற்கண்ட வைத்தியசாலைகளுக்குத் தெரிவித்தால், அவ்வைத்திய அதிகாரிகள் உடனே அதற்குத் தகுந்த சிகிச்சை செய்வார்கள். மாடுகளுக்கு அம்மை குத்துவதனால் அவைகளுக்குப் பல வியாதிக ளணுகாவெனக் கண்டறியப்பட்டிருக்கிறது. குடியானவர்கள் இவ்விஷயத்தைக் கவனிக்கவேண்டியது மிகவும் இன்றியமையாததாயிருக்கிறது. கோக்களின் சந்ததி விருத்திசெய்யும் நிமித்தம் அனகாபல்லி, ஒங்கோல், பிட்டாபுரம், பல்லாரி, கொத்தசெருவு முதலான விடங்களில் நடந்தேறிய கால்நடைகளின் சந்தைகளுக்காக நம் கவர்ன்மெண்டார் வேண்டிய திரவிய சகாயம் செய்ததேயல்லாமல், நம் தேசத்தில் அதிக வேலைசெய்யும் எருமைக்கடாக்கள் க்ஷீணித்திருக்கின்றன வென்றும் அவைகள் விருத்தியடையும்படி அவைகளை நன்றாய்ப் போஷித்து வரவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டார்கள். நம் தேசத்தில் நமக்கு ஆகவேண்டிய ஒவ்வொரு நன்மையையும் கவர்ன்மெண்டாரே செய்யவேண்டுமென்று ஜனங்கள் கருதியிருப்பதால் அவர்கள் சீக்கிரத்தில் விருத்திக்கு வருகிறதில்லை. பசுச் சிகிச்சையில் தேறிய சகாதேவர் லோகோபகாரமாய்க் கோசிகிச்சா கிரந்த மொன்றை அருளிச்செய்தனர். அக்கிரந்தத்தை நாணாயர் என்னும் கவி தெலுங்குப் பாஷையில் எழுதினார். அதைக்கொண்டு வடநாட்டார் மிக்க அக்கறையுடன் பசுச் சம்ரக்ஷணை செய்து வந்தார்கள். பின்பு ஜனங்க ளதை மறந்து வாயில்லா ஜந்துக்களைச் சரிவரப் போஷித்து வராததினால் இந்நூல் இப்போது பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

1. தன்வந்தரிநிகண்டு.
2. ராஜநிகண்டு.
3. யூனானிசாஸ்திரம்.
4. கால்நடைகளின் வியாதி.
5. வாசஸ்பத்தியம்

முதலான கிரந்தங்களின் உதவியைக்கொண்டும், பிரசித்தமான இடையர் அநேகரின் அநுபவத்தைக்கொண்டும் இந்நூல் இயற்றப்பட்டிருக்கிறது. ஆகையால் மாடுகளை வைத்துக்கொண்டிருக்கும் பிரதி குடியானவனும் இந்நூலைத் தவறாமல் வைத்திருக்கவேண்டும்.

பூனைகளின் உபயோகம்.

வீடுகளில் வளர்க்கப்படும் ஜந்துக்களில் பூனையு மொன்று. இதனுபயோகம் அநேகருக்குத் தெரியும். பூனைகள் எலிகட்கு வைரியானதால் இந்த ஜந்துவை ஒவ்வொரு வீட்டிலும் வளர்ப்பது நன்மையெனக் கருதப்படுகிறது. பிளேக் வியாதியானது எலிகளால் உண்டாகிறதென்று கண்டு பிடிக்கப்பட்டு அநேகமாயிரம் எலிகளைக் கொன்றுவருவதை யாவரு மறிவார்கள். இருந்தாலும், சமீபத்தில் அம்ரோட் ஜில்லாவின் வைத்திய இலாகா ஆபீஸராகிய லெப்டினென்ட் கர்னல் ஏ. பூகனன், ஐ. எம். எஸ்; என்பவர் பிளேக் வியாதியைத் தடுக்கப் பரிகார மொன்று கண்டு பிடித்திருக்கிறார். பிளேக் ஒழியவேண்டுமானால் பூனையை வளர்ப்பதுதான் தகுதியென்கிறார். சுகாதார ஏற்பாடுகள், பிளேக் அம்மை குத்துதல் ஆகிய மற்ற ஏற்பாடுகளெல்லாம் பூனைக்குப் பின்னிட்டுத்தான் என்றும் கூறுகிறார். இவர் தம் அனுபோகத்தின் பேரில் சொல்வது ஒருவாறு ஒப்புக்கொள்ளத் தக்கதாகவே யிருக்கிறது. பிளேக் வியாதிக்காகப் பயந்து நம் வீடுகளில் சுகாதார இலாகாதார் கார்பாலிக் பவுடர், மற்றும் பல விதத் துர்நாற்றங்களைப் போக்கும்படியான

மருந்துகளை ஊற்றிச் சுத்தி செய்தபோதிலும், வீட்டிலிருக்கும் எலிகள், பெருச்சாளிகள் தம் தம் வளைகளில் ஒளிந்துகொண்டிருந்து எல்லா வேலைகளும் தீர்ந்தபிறகு முன்போல் வீடெல்லாம் திரிய ஆரம்பித்துவிடும். கண்ணுக்குந் தெரியாத ஒரு பிளேக் புழுவையும் விடாமல் மருந்துகளைக்கொண்டு சங்கரிப்பது மிகவும் அசாத்தியமாகத்தா னிருக்கிறது. சில வீடுகளில் பிளேக் வியாதியின் பொருட்டு மருந்துகள் முதலானவைகள் ஊற்றிச் சுத்தி செய்யப்படும்போது அவ்வீட்டாருக்கும், சுகாதார இலாகாதாருக்கும் பெருத்த சண்டைகள் முதலியன உண்டாகிப் பெருத்த அபாயங்களும் உண்டாகிவிடுகின்றன. இவ்வேற்பாடுகளைத்தவிர வேறு விதமாக ஜனங்களுக்கு அனுகூலமான ஏற்பாடுகள் செய்தால் யாவரும் ஒத்துக்கொள்ளத் தயாராகத்தான் இருக்கிறார்கள். இவ்வாறாக நன்மை, தீமைகளையெல்லாம் மிஸ்டர் ஏ. பூகனன் அவர்கள் தம் அனுபோகத்தின் பேரில் ஆராய்ந்தறிந்து மிகவும் சுலபமானதும், எல்லா ஜனங்களும் அதிகப் பிரியத்துடனும் ஒத்துக்கொள்ளத்தக்க பிளேக் சங்காரி பூனைதானென்று கண்டுபிடித்திருக்கிறார். பிளேக் வியாதியைத் தடுக்கச் செய்துவரும் ஏற்பாடுகளைக்குறித்து, இந்துக்களும், மகமதியர்களும், மற்ற வகுப்பாரும் கொள்ளும் அபிப்பிராயங்களை நன்றாய் இவர் அறிந்துகொண்டு பின் வருமாறு கூறுகிறார்:—கும்பல் கும்பலாக எலிகளிருக்கும் ஒரு வீட்டில் அடிக்கடி சுத்தி செய்தாலும், சுத்தியான சாப்பாடு புசித்தாலும், சுத்தியாக வடிகட்டின நல்ல ஜலம் குடித்தாலும், அறைகளில் நன்றாகக் காற்று பரவும்படிச் செய்தாலும் யாதொரு பிரயோஜனமில்லை. ஒரு வீடு எவ்வளவு அசுத்தியாயிருந்தாலும், அசுசியான சாப்பாடு சாப்பிட்டபோதிலும், கெட்ட ஜலம் குடித்தாலும், கெட்ட காற்று சுவாசித்தபோதிலும், அவ்வீட்டில் தகுதியான பூனைகளிருந்தால் பிளேக் வியாதி நிவிர்த்தியாகிவிடும். பிளேக் வியாதி பரவுதற்குக் காரணம் எலிகள்தான். ஆகையால் இவ்வெலிகளைக் கொல்ல ராஜாவாகிய பூனையைக்கொண்டு நாம் நம் நாட்டில் பிளேக் வியாதியில்லாமல் ஜீவிக்கலாம். பிளேக் வியாதியைத் தடுக்க பிளேக் அம்மை குத்துதல்தான் சரியான வழியென்று நாம் எண்ணக்கூடாதென்றும், இவ்வியாதிக்குக் காரணமாகிய எலிகளைக் கொல்லும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்றும் மிஸ்டர் பூகனன் கூறுகிறார். மிஸ்டர் பூகனன் தம் ஜில்லாவில் தம் குடிகளுடைய அனுபோகத்தை நன்றாய் அறிந்துகொண்டு தம் குடிகளும் பூனையைத்தான் பிளேக் சங்காரியாக ஏற்பாடுகள் செய்ய ஒத்துக்கொண்டிருப்பதாகவும், இப்படிக்கில்லாமல் பிளேக் அம்மை குத்திக்கொண்டால், சிலமாதங்கள்வரை சுகமாக விருப்பதாகவும், கைகள் புண்ணாகிறதினாலும், ஜுரம் வருவதாலும், வேலைகளுக்குச் சில நாட்கள்வரை போக முடியாது போய்விடுவதனாலும் குடிகள் இஷ்டம் கொள்ளுவதில்லையென்றும், பூனைகளை வளர்த்தால் வீட்டில் அடியோடு எலிகள் நிவிர்த்தியாகிவிடுவதாகவும், ஆனால் தின்றுவிட்டு எலிகளைப் பிடிக்காமல் சோம்பலாயிருக்கும் பூனைகளை வளர்க்காமல், தகுதியாக வேட்டையாடும் பூனைகளையே வளர்க்க வேண்டுமென்றும், செலவு ஒன்றுமில்லையென்றும், ஆனால் சில வேளைகளில் நம் வீட்டில் வளர்க்கும் புறாக்களையும், கோழிக்குஞ்சுகளையுங்கூட வேட்டையாடுமென்னும் ஒரு குறையேதவிர வேறு கெடுதி ஒன்றுமில்லையென்றும், பூனைகளை வளர்க்க "பார்சீகர்களும்," "யோவானி டெர்ஸ்" என்பவர்களும் தவிர மற்ற எல்லா வகுப்பாரும் சம்மதமாக விருப்பதாகவும் கூறுகிறார். குடிகள், மிஸ்டர் பூகனன் சொல்லியவாறு பூனையின் மதிப்பை நன்றாய் அறிவார்களானால் பூனைக்குட்டிகளை மிகவும் பத்திரமாகக் காப்பாற்றுவார்களென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை.

இராஜா வி. கிஷன்பகதூரின் நாய்கள் ஆசிரயம்.

வெளிஜில்லாக்களில் உள்ள அநேகங் கிராமங்களிலும் பட்டணங்களிலும் திக்கற்றுத் திரியும் நாய்களைப்போல், சென்னையிலும் கணக்கற்ற நாய்கள் இருப்பிடமில்லாமலும், சொந்தக்காரர்களில்லாமலும், வயிற்றுக்கில்லாமல் மிகவும் மெலிந்து அலைந்துகொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நாய்களின் சந்ததியும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இவற்றின் தொகையை ஒரு மிதத்தில் வைக்காவிட்டால் அநேக நாய்கள் பயித்தி

யம்பிடித்து ஜனங்களுக்கு அதிக கெடுதியை யுண்டாக்குகின்றன. இவ்வித அபாயத்தினின்றும் ஜனங்களைக் காப்பாற்ற அடிக்கடி அநேகம் நாய்களைக் கொல்லவேண்டியிருக்கிறது. இந்த ஏற்பாடானது, சென்னைப் போலீஸ் கமிஷனரால் நடத்திவரப்படுகிறது. இவ்வாறு கொல்லப்படும் நாய்களுக்கு வெகுமதிகள் கொடுக்கப்படுகின்றன. யாதொரு பிராணியையாவது கொல்வது ஹிந்துக்களுக்கு ஒவ்வாத செய்கை. ஆனால் இக்கொலைத்தொழிலுக்கு, வயிற்றுக்கின்றிக் கஷ்டப்படும் ஈனஜாதிகள்மாத்திரம் பாத்தியப்படுகிறார்கள். இந்த ஈனஜாதியார் தாங்கள் பார்க்கும் நாய்களைத் தடியாலடித்துக் கொன்றுவிடுவார்கள். இவ்விதமாக அநேகம் நாய்க்குட்டிகளையும் கொன்றுவிடுகிறார்கள். இச்செயலைப் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் மனவருத்தமும், வெறுப்பும் உண்டாகின்றன. இவ்வாறு கொல்வதைச் சிறுவர்கள் பார்த்தால் அவர்களையும் கொடிய செயல்களைச் செய்யும்படி மனம் ஏவிவிடும். இவ்வாறான கொடிய செய்கைகளையெல்லாம் நிறுத்தும் பொருட்டுச் சென்னை ஜீ. ஹி. நி. சங்கத்தார் நாய்களுக்கு ஓர் ஆசிரயத்தை ஏற்படுத்திக் காலஞ்சென்ற நமது விக்டோரியா சக்கிரவர்த்தினியார் தலைவராகவிருந்து இங்கிலாந்தில் நடத்திவந்த நாய்களின் ஆசிரயத்தின் ஏற்பாடுகளைப்போலவே நம் சென்னையிலும் நடத்தவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அத்தேசத்தில் கட்டுக்குட்படாமல் தெருக்களில் சுற்றும் நாய்கள் போலீஸாரால் பிடித்துக்கொண்டு போகப்பட்டு ஐந்துநாள்வரை நாய்களின் ஆசிரயத்தில் வைக்கப்படுகின்றன. இதற்குள் அந்நாய்களின் சொந்தக்காரர்கள் வந்து கேட்காவிட்டால், அவைகளை "லிதால் சேம்பர்" என்னும் அறைக்குட் செலுத்தி இரண்டு நிமிஷங்கட்குள் யாதொரு வருத்தமின்றிக் கொன்றுவிடுகிறார்கள். இந்த அறையில் ஓர்வித விஷஆவியை உண்டாக்கி வைப்பதால் நாய்கள் அவ்வறைக்குள் சென்றதும் மெய்மறந்து மாண்டுபோகின்றன. நம் சென்னையிலும் இவ்வாறு நாய்களைக் கொல்ல "லிதால் சேம்பரை" ஏற்படுத்திப் பரீக்ஷை பார்த்துவருகிறார்கள். இதற்காகக் கொஞ்சம் நிலம் வாங்கி நாய்களுக்காக ஆசிரயமொன்று கட்டவேண்டியதாயிற்று. சில கனவான்கள் சிறிது பணச்சகாயம் செய்தார்கள். சென்னைக் கவர்ன்மெண்டாரும் ரூபாய் 2,500 சகாயம் செய்தார்கள். கடைசியாக ஜந்துக்களின் வைத்தியசாலையைக் கட்டிவைத்த இராஜா வேணுகோபால பகதூர் அவர்களின் சகோதரராகிய இராஜா வி. கிஷன் பகதூரவர்கள் ரூபாய் 12,000 சகாயம் செய்தார்கள். இவ்வுதவியினாலேயே மேற்சொன்ன நாய்களின் ஆசிரயம் கட்டி முடிந்தது. இவர் செய்த பெரிய நன்றிக்காக, இவ்வாசிரயத்துக்கு இவருடைய பெயரை வைத்து, அது "இராஜா வி. கிஷன் பகதூரவர்களின் நாய் ஆசிரயம்" என்று அழைக்கப்படுகிறது. இவர் செய்திருக்கும் தருமம் இஃதொன்றேயல்ல. தாம் வசிக்கும் பட்டணமாகிய வேங்கடகிரியில் ஒரு வைத்தியசாலையையும், பத்திரிகைகளையும் புத்தகங்களையும் வாசிப்பதற்காகத் தரும கட்டடங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றனர். இப்பொழுது இவர் கட்டியிருக்கும் நாய்களின் ஆசிரயம் தம் சகோதரரால் சென்னை வேப்பேரியில் கட்டப்பட்ட "இராஜா வேணுகோபால பகதூரவர்களின் ஜந்து வைத்தியசாலை"க்குப் பக்கத்திலேயே கட்டப்பட்டிருக்கிறது. இராஜா கிஷன் பகதூரின் நாய் ஆசிரயமானது நம் சென்னைக் கவர்னராகிய சர். ஆர்தர் லாலி அவர்களால் அநேகங் கனவான்களின் முன்பாக ஒரு வெள்ளிச்சாவியினால் முதலில் திறக்கப்பட்டது. நாய்களைத் தடியாலடித்துக் கொல்லும் வழக்கத்தை வர வர நிறுத்தி நாம் மேற்சொன்னபடி திக்கற்ற நாய்களை ஆசிரயத்துக்குப் பிடித்துக் கொண்டுபோய், ஐந்துநாட்களுக்குப் பிற்பாடு அவைகளை லிதால் சேம்பரில் விட்டு, அவைகளுக்கு யாதொரு கஷ்டமின்றி அவைகளைக் கொன்றுவிடத் தகுந்த ஏற்பாடுகள் சீக்கிரத்தில் செய்து முடிக்கப்படுமென்று நம்புகிறோம். நம் காருண்ய கவர்ன்மெண்டாரும் குன்னூரில் நாய்க்கடிக்காக வைத்தியசாலையொன்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதுவரையில் நாய்க்கடியால் கஷ்டப்படுகிறவர்கள் பாஞ்சாலநாட்டிலிருக்கும் காஸாலி என்னுமிடத்திலுள்ள வைத்தியசாலைக்கே போய்க்கொண்டிருந்தார்கள். இப்பொழுது சமீபத்திலிருப்பவர்கள் குன்னூருக்குப்போய்ச் சிகிச்சை செய்துகொள்ளும்படியான சுகம் ஏற்பட்டிருக்கிறது.

சிங்கமும் செய்நன்றி யறியும்.

காட்டுமிருகங்களில் சிங்கமானது அதிக பலமும் தைரியமுமுள்ளது. ஆயினும் கபடமும் இரத்தப்பிரியமுமுள்ள புலியைப்போல மற்ற உயிர்களை வீணில் உபத்திரவம் செய்யாமல் பெருந்தன்மையாய் இருப்பதால் அதற்கு மிருகேந்திரன் என்று இட்டிருக்கிற பெயர் தகுந்ததே. மனிதர் அதைப் பழக்கிச் சாதுவாக்கியிருக்கிறார்கள். அஸ்தமனவேளையில் மிருகங்கள் தண்ணீர் குடிக்க வருகிற பக்கங்களில் சிங்கம் இரைதேடி வந்து வழக்கமாய்ப் பதுங்கி இருந்து தரையை நோக்கிக் குனிந்து இரண்டு மூன்றுதரம் கெர்ச்சிக்கும்; அப்பொழுது அருகிலுள்ள மிருகங்கள் சத்தம் இங்கிருந்து வருகிறதென்று அறியாமல் திகில்பட்டு நாலு பக்கமும் ஓடத் தலைப்பட, சில அது பதிவிருக்கும் இடத்துக்கே வந்து அதற்கு ஆகாரம் ஆகும். சிங்கம் ஒருவாறு பயப்படும் குணமுள்ளது. வெள்ளைத்துணியை எங்கேயாவது கட்டிக் காற்றில் ஆடவிட்டால் அதன் அருகே போகாது; இரும்பாணி முதலிய உலோகக்கருவிகள் காற்றில் அடிபடுகிற தொனி கேட்குமிடத்திலும் அணுகாது. முன்னொரு காலத்தில் அடிமை ஒருவன் தன் எஜமானனை விட்டோடிப் போய்க் காட்டில் அலைந்து திரிந்து ஒருநாள் அங்கே ஒரு குகையில் புகுந்தான். புகுந்த சிறிது பொழுதுக்குள் ஒரு பெரிய சிங்கம் வந்து அதனுள் நுழைந்தது. அடிமை பயந்து நடுநடுங்கி மரணம் வந்துவிட்டதென்று பதைக்கையில், நொண்டிக்கொண்டுவந்த அந்த மிருகம் அவனுக்குத் திப்பிரமை உண்டாகும்படிச் சும்மா படுத்திருந்து, ஏதோ வலியினால் அவஸ்தைப்படுகிறதுபோலச் சற்று நேரம் மந்தமாய் வீரிட்டுக் கதறி, அப்பால் தன் முன்னங்காலை அவனுக்கு நேரில் நீட்டிற்று. இதனால் அவன் தைரியங்கொண்டு முன்னே அதன் காலை மெள்ளத் தடவிக்கொடுத்துப் பிறகு அதைத் தன் கையில் எடுத்துப் பார்க்க, உள்ளங்காலில் பெரிய முள் ஒன்று ஆழத் தைத்து அழுகுபுண் உண்டாயிருந்தது. அந்த முள்ளை இலகுவாய்ப் பிடுங்கிச் சீழையும் பிதுக்கிவிட்டுத் தன் வஸ்திரத்தில் ஒரு துண்டு கிழித்து அந்த அடிக்காலைச் சுற்றிக் கட்டினான். சிங்கம் தன் பாதை நீங்கினதை உணர்ந்தவுடனே அவன் கையை நக்கி நக்கி, அவனை மோந்து அவனிடத்தில் அன்புகாட்டி, அன்றுமுதல் தன் ஆகாரத்தில் சிறிது கொண்டுவந்து தினந்தோறும் அவனுக்குமுன் வைத்து வந்தது.

இவ்வாறு சிங்கமும் அவனும் நேசமாயிருந்துவருகையில் ஒருநாள் சிங்கம் எப்படியோ பிடிபட்டது. அதேகாலத்தில் அடிமையானவனும் குகையைவிட்டுத் தூரம் போய் அகப்பட்டு அவ்வூர் வழக்கப்பிரகாரம் மற்றும் குற்றவாளிகளோடு ஒரு பண்டிகை நாளில் ஜனங்களுக்கு வேடிக்கையாய்க் காட்டுமிருகங்களுக்கு இரையாகும்படிச் சிக்ஷை விதிக்கப்பட்டான். குறித்தநாளில் பட்டினிபோட்டு வைத்திருந்த துஷ்ட மிருகங்களைக் கூண்டுகளில் அடைத்து வேடிக்கை மண்டபத்தில் ஒரு பக்கத்திலும், இரையாகப்போகிற குற்றவாளிகளை எதிர்ப்பக்கத்திலும் நிறுத்தி, இதையும் மற்ற கொடுமைகளையும் விநோதமாகப் பார்க்கவந்த எல்லோரும் சுற்றிலும் மேடைகள்மீது உட்கார்ந்த பின்னர், மேற்சொல்லிய அடிமையை நடுக்களத்தில் தள்ளி ஒரு மிருகக்கூண்டின் கதவைத் திறந்துவிட்டார்கள். நிமிஷத்தில் யாவரும் திடுக்கிடும்படியாய்ப் பெரிய சிங்கம் ஒன்று பயங்கரமான கர்ச்சனையிட்டு வெளியில் பாய்ந்து அடிமையைப் பார்த்தவுடனே மேலே வீழ்ந்தடிக்க எத்தனித்தது. ஆனால் நொடிக்குள்ளே தன் உக்கிரத்தை அடக்கி அவன் கிட்டப் போய் மோந்து அவன்மேல் தன் உடம்பை உரிஞ்சிப் பூனையைப்போல் உறுமிக்கொண்டு சுற்றிச் சுற்றி வந்ததினால், கூடியிருந்த ஜனங்கள் இதென்ன விபரீதம் என்று அதிசயித்து விசாரித்தார்கள். முன்னே காட்டில் தன்னிடத்தில் கூட்டுறவாய் இருந்த சிங்கம் இதுதான் என்று இப்போது அறிந்துகொண்ட அடிமை அங்கே நடந்த விருத்தாந்தங்களைத் தெரிவிக்க, அவர்கள் அவன் குற்றத்தை மன்னித்துச் சிங்கத்தை அவனுக்கே கொடுத்துவிட்டார்கள். பிற்பாடு வெகுகாலம் அந்தச் சிங்கம் அப்பட்டணத்தின் தெருக்களில் அவன் செல்லும்போதெல்லாம் நாய்போல் அவனைத் தொடர்ந்துகொண்டே திரிந்துகொண்டிருந்தது.

சமாசாரக் குறிப்புகள்.

1. பசுவின் பால்.—தற்கால நாகரிக ஜனங்களுக்குக் காபி, டீ முதலான பானங்களுக்குப் பால் வேண்டியிருக்கிறது. பாலின் குணம் பசு தின்னும் ஆகாரத்தையும், அது தங்கும் இடத்தையும் பொருந்தியிருக்கும். பாலிலிருக்கும் கெடுதியினால் அநேகர் அறிந்தும் அறியாமலும் தங்கள் சுகத்தை இழந்துகொள்ளுகிறார்கள். இது தாங்கள் பசுக்களினிடம் காட்டும் கொடுமைக்கு ஓர் தண்டனையாகப் பாவிக்கவேண்டி யிருக்கிறது. குடியானவர்களில் சிலர் பால் கொடுக்காத மாடுகளைப் போஷிக்கச் சக்தியில்லாமலும், சிலர் போஷிக்கச் சக்தியுடையவர்களாயிருந்தாலும் அவைகளின்பேரில் தயையில்லாமலும், அவைகளைக் காடுகளுக்கு ஓட்டிவிடுகிறார்கள். அவ்விடத்தில் அவைகளுக்கு மழை, வெயில் முதலானவைகளுக்காகத் தங்க நிழலுள்ள வீடுகளும், நல்ல தண்ணீர் குடிக்கும் தொட்டிகளும் கிடையாமல் அவை மிக வருத்தப்படுகின்றன.

---

2. பிரார்த்தனை மாடுகள்.—அநேகர் கோயில்களுக்குப் பசுக்களையும், எருதுகளையும் தங்கள் இஷ்டம் நிறைவேறியதற்காகக் கொண்டுபோய்ச் செலுத்துவதுண்டு. அவற்றில் பால் கறக்கும் பசுக்களைமாத்திரம் பாலுக்காகவும், தேர்ந்த சில எருதுகளை மேளரிஷபங்களாகவும் கோயில்களில் உபயோகிக்கின்றார்கள். மற்றவை பயனற்றுத் திரிகின்றன. அவைகளைப் பெருமாள் மாட்டுக்காரர்கள் பிடித்து மச்சங்களை ஆற்றி, அவைகளுக்கு இரக்ஷைகளைக் கட்டி, வீடு வீடாகப் பெருமாள் மாடெனக் கொண்டுவந்து பிச்சை எடுத்துத் திரிகிறார்கள். துன்மார்க்கர்கள் தோலுக் காசைப்பட்டு அவைகளுக்கு விஷமருந்துகள் கொடுத்துக் கொன்றுவிடுகிறார்கள். சிலர் பச்சை மாமிசத்திற்காக அவைகளை வெட்டிப்போடுகிறார்கள். அமெரிக்கா தேசத்தில் பீசான் என்னும் பசு ஜாதி க்ஷீணித்துவருவதைக் கண்டு, அத்தேசத்தார்க ளெல்லோரும் சேர்ந்து, சில காலத்திற்குமுன் அந்த ஜாதி ஜந்துக்களையெல்லாம் வாங்கி லக்ஷங் கணக்காய்ப் பணஞ்சேர்த்து, அவைகளைச் சீர்ப்படுத்தும் பொருட்டுச் சங்கமொன்றை யேற்படுத்தி யிருக்கிறார்கள். இப்படி நம் தேசத்திலுஞ் செய்தாலல்லவோ நலம்?

---

3. குதிரையின் வயது.—குதிரைக்குட்டி பிறந்த நான்கு வருடங்கள்வரை அதற்குப் பால் பற்களிருக்கும். பிற்பாடு அப்பற்கள் உதிர்ந்து கெட்டிப்பற்கள் முளைக்கும். வயது முதிர முதிர பற்களின் நிறம் படிப்படியாக மாறிக்கொண்டே வரும். அந்த மாறுதல்களைக்கொண்டுதான் குதிரையின் வயதைக் கண்டுகொள்வது. குதிரை சாதாரணமாக 30 வருடங்கள்வரை ஜீவித்திருக்கும். இதைப் பார்க்கிலும் நீடித்தகாலம் ஜீவித்திருக்கும் சில குதிரைகளும் உள. 60 வயதுக்கு மேற்பட்டுக் குதிரை ஜீவித்திருந்ததாக எங்கும் புலப்படவில்லை, சொல்லப்படவுமில்லை. சாதாரணமாகக் குதிரை ஜாதிகளுக்குச் சம்பவிக்கும் நானாவித ரோகங்களைக் கண்டுகொண்டு அவைகட்கு வியாதியாவது வேறெத்தகைய இடையூறாவது நேரிடும் சமயங்களில் தகுதியான சிகிச்சைகளைச் செய்துவரவேண்டியது. இது குதிரைகளை வைத்திருப்பவர்களின் முக்கிய கடமையாகவிருக்கிறது. குதிரையின் பலத்தை அறிந்துகொண்டு அதைச் சவாரி செய்யவேண்டும். குதிரைக்குப் பலம் குறைவாயிருந்தால் அதை நெடுந்தூரமாகிலும் அதிக ஓட்டமாகவாகிலும் ஓட்டக்கூடாது.

---

4. நெற்பயிர்ப் பூச்சி.—மாக்ஸ்வெல் லெப்பிராய் என்னும் ஒரு ஐரோப்பியர் செய்து வந்த சிற்றுயி ராராய்ச்சியினால், நெற்பயிர்க் கதிர் புறப்படும்போது இப்பூச்சிகள் காடுகளினின்றும் புற்றரைகளினின்றும் வந்து வயல்களிற் சேர்ந்து கதிர்களிலிருக்கும் பாலைக் குடித்து வெகுசீக்கிரத்தில் எண்ணில் அதிகரிப்பதாகவும், இப்பூச்சிகளைக் கொன்று தின்ன ஓர்வித வண்டுகளும் அத்தருணத்தில் வயல்களில் வந்து சேருமென்றும், குடியானவர்கள் அவ்வண்டுகளைத் துரத்திவிடாமலிருப்பது பயிருக்கு நலமென்றும் புலப்படுகிறது.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1908.

ஜீ. ஹி. ஸி. சங்கத்தாரின் ஜந்து விநோதக் காட்சி—1908-வூ.

S. P. C. A. ANIMAL SHOW—1908